**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC.No.481/2020**

**PW - 9**

| | | |
|---|---|---|
| Name | : | அஜ்மீர் காஜா மைதீன் ( LW.10 ) |
| Father's / Husband Name | : | த/பெ. அப்பாஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2024 என்னால்** சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. 8ம் எதிரி ஆஜர். மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 03.10 மணி )**

**முதல் விசாரணை (அரசு தரப்பில்) :–**

1) நான் தற்போது பெரியக்குளத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் புகார் கொடுத்த அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளான விஸ்வநாதன், சம்பத்குமார், வெள்ளையங்கிரி, மாணிக்கம், குணசேகரன் , கார்த்திக், சுரேஷ் (எ) சுரேஷ்ராம் ஆகியோர்களை எனக்கு தெரியாது. 8ம் எதிரி ஹகிம் என்பவரை எனக்கு தெரியும். சுமார் 2019 ம் வருடம் நல்லிபாளையம் போலிசார் விசாரித்து எனது பெயரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துக்கொண்டார்கள். இவ்வழக்கின் சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் போலீசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2) கடந்த 19.09.2019 ம் தேதி விழுப்புரத்தை சேர்ந்த சுரேஷ்ராம் என்பவரிடம் ஹகிம் TN 30 P 6829 என்ற லாரி ஒன்றை ரூ.5,40,000/– ற்கு விலைக்கு பேசியிந்தார் என்று சொன்னால்

அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த லாரியை விழுப்புரத்தில் இருந்து தேனி பெரியகுளத்திற்கு கொண்டு வந்து என்னை கொடுக்க சொன்னார் என்றுசொன்னால் சரியல்ல. அதன் படி சுரேஷ் ராமிடம் ஹகிம் கொடுத்த ரூ.2,40,000/–த்தை அட்வான்ஸ் கொடுப்பதற்கு கொடுத்துவிட்டு மோட்டார் வாகனம் ஒப்பந்தம் ஒன்றை சுரேஷ்ராமிடம் இருந்து எனது பெயருக்கு எழுதி வாங்கிக்கொண்டு மீதி பணம் ரூ.3 லட்சத்தை ஹகிம் வந்து பின்னர் கொடுப்பார் என்று சொல்லிவிட்டு நான் லாரியை விழுப்புரத்தில் இருந்து பெரியகுளத்திற்கு கொண்டு ஹகிமிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

3) அந்த லாரிக்கு ஹகிம் தேனியில் வைத்து இன்சூரன்ஸ் எடுத்து வேலை செய்து இந்த லாரியை 13.10.2019 ம் தேதி பெரியகுளத்தில் வைத்து ஹகிம் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த கண்ணன் என்பவருக்கு ரூ.7,75,000/– க்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. ரூ.1,75,000/–த்தை கண்ணன் ரொக்கமாக ஹகிம்க்கு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. திருப்பத்தூர் ஸ்ரீராம் பைனான்ஸ் சார்பாக ரூ.6 லட்சத்திற்கு உண்டான காசோலை ஒன்றை கண்ணன் சார்பில் ஹகிம் அவர்களின் வங்கி கணக்கிற்கு வழங்கினார் என்று சொன்னால அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அந்த லாரியை கண்ணன் தான் வாங்கி ஓட்டிவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதன் பின்னர் திருட்டு வழக்கிற்கு தொடர்புடையது என்றும், நாமக்கல் நல்லிபாளையம் போலிசார் பறிமுதல் செய்து வந்தார் என்றும், கண்ணணிடம் ரொக்கமாக வாங்கிய ரூ.1,75,000/–த்தை மட்டும் கண்ணணிடம் ஹகிம் திருப்பி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

4) பைனான்ஸில் வாங்கிய பணத்தை விழுப்புரத்தை சேர்ந்த சுரேஷ் என்பவரிடம் கொடுத்துவிட்டதாகவும் சுரேஷ் ராம் திருப்பி கொடுத்தால் மட்டுமே என்னால் ஸ்ரீராம் பைனான்ஸஸிற்கு ரூ.6 லட்சம் திருப்பி தரமுடியும் என்று சொல்லிவிட்டு ஹகிம் மற்றும் சுரேஷ்ராம் தலைமறைவாகிவிட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. போலிஸ் விசாரணையிலும், வழக்கின் 161 வது வாக்குமூலத்திலும் வழக்கின் உண்மை சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கு சம்பவங்களை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

1 முதல் 8 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் குறுக்குவிசாரணை இல்லை என்றுதெரிவித்துக்கொண்டார்கள்.

**மறு விசாரணை – இல்லை.**

**(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 03.25 மணி )**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC.No.481/2020**

**PW - 10**

| | | |
|---|---|---|
| Name | : | சையத் இப்ராகிம் ( **LW. 11** ) |
| Father's / Husband Name | : | த/பெ.அப்துல் ஹக்கிம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.08.2024 என்னால்** சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 03.26 மணி )**

**முதல் விசாரணை (அரசு தரப்பில்) :–**

1) நான் தற்போது தேனி மாவட்டம் பெரியகுளத்தில் குடியிருந்து டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஹகிம் ஐ எனக்கு தெரியும். அ.சா.1 முத்துசாமியை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் போலீசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) கடந்த 20.09.2018 ம் தேதி ஆஜர் எதிரி ஹகிம் என்பவர் TN 30 6829 என்ற எண்ணுள்ள லாரியை காட்டி அதற்கு இன்சூரன்ஸ் போட்டுதர சொல்லி கேட்டார் என்று சொன்னால் இல்லை. ரூ.54,005/–ற்கு பெரிய குளம் இந்தியன் ஓவர்சீஸ் காசோலை எண்.546771 ன் மூலம் இன்சூரன்ஸ் போட்டு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் தான் தெரிந்து நான் இன்சூரன்ஸ் போட்டுக்கொடுத்த லாரி திருட்டு வழக்கு தொடர்புடையது என்று சொன்னால் சரியல்ல. போலிசார் விசாரணையிலும், 161 வது

வாக்குமூலத்திலும் வழக்கிலும் வழக்கின் உண்மை சம்பவங்களை சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் உண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

1 முதல் 8 எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் குறுக்குவிசாரணை இல்லை என்றுதெரிவித்துக்கொண்டார்கள்.

**மறு விசாரணை – இல்லை.**

**(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 03.32 மணி )**